# பெத்லகேம் செல்வோம்




**அப்பொழுது அவள்: இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ என்றாள். அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். அவள் தன்னோடேகூட வர மனஉறுதியாயிருக்கிறதைக் கண்டு, அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை. (ரூத் 1:15-18).**

மேற்கண்ட வசனங்கள் நகோமி தன் மருமக்களோடு மோவாப் தேசத்திலிருந்து பெத்லகேம் நோக்கி பயணம் புறப்பட்ட பொழுது கூறின வார்த்தைகள் ஆகும். ஆம் இஸ்ரவேலில் உள்ள பெத்லகேமிற்கு வருவதால் உலக பிரகாரமாக உனக்கு நன்மை எதுவும் கிடைக்கபோவதில்லை அதற்கு பதில் மோவாபிற்கே செல்வது நல்லது என்று நகோமி கூறிய பொழுதும், அதைக்கேட்டு மற்றொரு மருமகளான ஓர்பாள் சென்றபொழுதும், ரூத் தன்னுடைய முடிவில் உறுதியாய் இருந்தாள். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி ஸ்தீரியின் வித்தாகிய தேவகுமாரன் பெத்லகேமில் தாவீதின் ஊரிலே பிறப்பது அவருடைய சித்தமாகையால் அன்று அந்த ரூத்தின் மனதில் ஆண்டவர் கிரியை செய்தார்.

இஸ்ரவேல் தேசத்தில், பெத்லகேம் ஊரில் எத்தனையோ பெண்கள் இருந்தாலும் மோவாப் தேசத்தின் ரூத்தே புதிய ஏற்பாட்டின் வம்சாவளியில் இடம் பெற்றாள். இவையாவும் தேவனின் அநாதி திட்டம் மற்றும் சித்தமாகும். ரூத் கூறிய வார்த்தைகளில் முக்கியமான ஒன்று **"உம்முடைய தேவன் என்னுடைய தேவன்"** என்பதாகும். ஆம் திருமணத்திற்கு முன்பு ரூத் ஆண்டவரை பற்றி அறிந்திருந்தாலோ இல்லையோ, ஆனால் இப்பொழுது தனக்கு யார் ஆண்டவர் என்பதை அவள் முடிவு செய்துவிட்டாள். அதை முடிவு செய்வது மட்டுமல்ல, அதை செயலின் மூலமாய் பெத்லகேமிற்கு பயணப்படுவதின் மூலம் வெளிப்படுத்தியும் விட்டாள். போவாஸ் அவளை மீட்பதற்கு காரணமாக அமைந்தது இந்த பயணமே.

இங்கு நாம் அறிந்து கொள்ளும் சத்தியங்கள் பல இருக்கின்றன. முதலாவது ரூத்தின் செயல் இரட்சிப்பை நோக்கி அடி எடுத்துவைக்கும் ஒரு மனந்திரும்புதலுக்கு ஏற்றதாக உள்ளது. இன்று பாவ இருளில், கொடிய பிணியில் இருக்கும் எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள், இரட்சிப்பை குறித்து கேள்விபடும் பொழுது அதை நோக்கி செல்கின்றனர். தாங்கள் அர்பணிக்கும் இந்த அர்பணிப்பின் மூலமாய் நித்திய பரலோக மேன்மையும், ஆவிக்குரிய ஆசிர்வாதங்களும், பூமிக்குரிய நன்மைகளும் எல்லாவற்றிற்கும் மேலாக சர்வ வல்ல ஆண்டவரை 'அப்பா பிதாவே' என்று கூப்பிட்தக்க புத்திர சுவிகார பாக்கியமும் கிடைக்கும் என்பதை பற்றிய முழுமையான தெளிவு இல்லாமல் இருந்தாலும், இரட்சிப்பை நோக்கி அவர்கள் எடுத்துவைக்கும் அந்த அடி மேலானதாகும்.

தங்கள் பாவ வாழ்க்கையில் இருந்து, நோயிலிருந்து, இன்னும் பலவித இன்னல்களில் இருந்து விடுபட இந்த இரட்சிப்பின் சுவிஷேசம் உதவுமா என்று வரும் அவர்கள், தேவன் அவர்களுக்கு வைத்திருக்கிற திட்டத்தை ஆரம்பத்தில் அறிவதில்லை. ஆம் ரூத்தும் போவாஸ் பற்றியோ, வயல்நிலங்களை பற்றியோ, அதை மீட்பதை பற்றியோ எந்த அறிவும் முதலில் பெற்றவளாய் இருக்கவில்லை. தான் பெத்லகேம் செல்வதின் மூலம் இவை எல்லாம் ஆண்டவர் மூலம் தனக்கு கொடுக்கப்படும் என்ற எண்ணத்திலோ அவள் பெத்லகேம் வரவில்லை. ஆனால் ஒன்றை அவள் உணர்ந்து இருந்தாள் அதாவது நகோமியோடு பெத்லகேம் சென்று அவளோடு வாழ்வதே நலம் என்பதாகும். **ரூத் 1:8,9** வசனங்களில் "**நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி: நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்; மரித்துப்போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயைசெய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக. கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று சொல்லி, அவர்களை முத்தமிட்டாள்.** ", நகோமியே அவர்கள் இருவரும் திரும்பி செல்வதின் மூலம் கிடைக்கும் புதிய வாழ்வை குறித்து கூறினாள்.

முதலில் மறுத்தாலும் பிறகு ஒர்பாள் சென்றுவிட்டாள். அவளுடைய பெயரும் வேதாகமத்தில் அதற்கு பிறகு குறிப்பிட படவில்லை. ஆனால் "**மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர்**

**அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்**“ **(ரூத் 1:17)** என்று கூறிய ரூத்தின் மன உறுதியோ அவளுடைய பெயரை புதிய ஏற்பாட்டின் முதல் அத்தியாயத்தில் கிறிஸ்துவின் சந்ததியில், தாவீதின் முன்னோராய் இடம் பெற செய்தது. **மத் 1:5 ஆம்** வசனம் மிகவும் ஆச்சரியமான வசனமாகும் “**சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான்; போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்; ஓபேத் ஈசாயைப் பெற்றான்;**“. ஆண்டவரின் வம்சவரலாற்றில் இடம்பெற்ற இரண்டே பெண்களான போவாசின் தாயாகிய ராகாபும், போவாசின் மனைவியான ரூத்தும் அடுத்த அடுத்த கால கட்டத்தில் புற ஜாதிகளிலிருந்து இஸ்ரவேல் வம்சாவளிக்குள் வந்தவர்கள். ஆம் ரூத்தை போல இனி ஒருபோதும் மோவாபாகிய உலக வாழ்க்கைக்குள்ளாய் செல்லமாட்டேன் என் வாழ்க்கையின் காலம் எல்லாம் பெத்லகேமில் இருப்பதே என்று முடிவு செய்யும் ஒருவரும் கெட்டுபோவதில்லை. ரூத் பெற்றது போல் மேலான ஒரு வாழ்வையே பெற்று கொள்வர்.

மேலும் நகோமியும் ரூத்தையும், ஒர்பாளையும் திரும்பி போக சொன்னாலும், அவளோடு இருக்க அவர்கள் விருப்பம் தெரிவித்து இருந்தது, தன் சொந்த தாய் வீட்டை காட்டிலும், மோவாப் தேசத்தை காட்டிலும், ஒரு புதிய வாழ்க்கையை உருவாக்கி கொள்வதை காட்டிலும், நகோமியோடு வெளிப்பிரகாரமாக ஒரு நன்மையும் இல்லாமல் இருந்தாலும், அவளோடு இருப்பதே நலம் என்று இருவரையுமே சிந்திக்க வைத்தது நகோமியின் வாழ்க்கையாகும். ஒருவேளை நகோமி விரக்தியில் சில காரியங்களை பேசினாலும் “**அதற்கு அவள்: நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பிவரப்பண்ணினார்; கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கையில், நீங்கள் என்னை நகோமி என்பானேன் என்றாள்.**“ **(ரூத் 1:20,21)**, அவள் ரூத்தை நேசித்த விதமும், அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்து கொடுத்த விதமும் சிறந்ததாகும். இன்று சபை விசுவாசிகளாய் உள்ளோர் எவ்வாறு தங்கள் வாழ்க்கை முறையின் மூலமாய் புறஜாதி மக்களை ஆண்டவர் பக்கம் கொண்டு வர வேண்டும், இரட்சிப்பிற்குள்ளாய் நடத்த வேண்டும் என்பதற்கு நகோமி ஒரு அடையாளமாய் உள்ளாள்.

இறுதியாக போவாசை குறித்து நாம் காணும் பொழுது, செல்வ சீமானாய் வாழ்ந்த பொழுதும், நற்குணசாலியாய், ஏழைகளை விசாரிக்கிறவராய், ரூத்தை குறித்து சாட்சி கொடுக்கிறவராய் காணப்படுகிறார் “**அப்பொழுது அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: நான் அந்நியதேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயைகிடைத்தது என்றாள். அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக: உன் புருஷன் மரணமடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது.**

**உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான்.**" **(ரூத் 2:10-12)**. மேலும் எல்லாவற்றையும் நியாயப்படியும், சட்டப்படியும் செய்வதை காணலாம் **(ரூத் 4:1,2)**.

எல்லாவற்றிற்கும் மேலாக "**அப்பொழுது அந்தச் சுதந்தரவாளி: நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு, நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன்; நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக்கொள்ளும்; நான் அதை மீட்டுக்கொள்ளமாட்டேன் என்றான்.**", **(ரூத் 4:6)** என்று கூறிய பொழுதும், தன்னை அங்கு அர்பணித்த போவாஸ் எதையும் இழந்துபோகவில்லை. "**நான் என் சுதந்தரத்தைக் கெடுக்காதபடிக்கு**", என்று பெயர் குறிப்பிடபடாத அவன் கூறிய பொழுதும், போவாஸின் அர்ப்ணிப்பு அவரையும் கிறிஸ்துவின் வரலாற்றில் ஒன்றாக்கியது. அவருடைய சுதந்திர வீதம் கெட்டுபோகவில்லை அதற்கு மாறாக அது தேவனால் மேன்மை பெற்றது. எனவே பாலைவனம் போல் எல்லாவற்றையும் இழந்த நிலையில் இருந்த நகோமி மற்றும் ரூத்தின் நிலையோடு மோவாப்பில் ஆரம்பமாகும் புத்தகம், பெத்லகேமிற்கு பயணித்து ஒரு அருமையான ஆசிர்வாதத்தோடு முடிகிறது. ரூத்தின் புத்தகம் தாவீதின் பிறப்பை பற்றி கூறி முடிந்தாலும், அது "**ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.**" **(ஏசா 11:1)** என்பதற்கு ஆரம்பமாய் உள்ளது. ஆமென், அல்லேலூயா.